# 4.6 பண்புக்கூறுகள்

**இலக்கு**

*எங்கள் தொடர்பாடலில் உள்ள பண்பாட்டு சிந்தனை முறைமைகள் மற்றும் பொருள்விளக்க முறைமைகளின் செல்வாக்குத் தொடர்பான விழிப்புணர்வை மாணவர்கள் வலுப்படுத்திக்கொள்வர். பண்பாட்டு உருவாக்கப் பண்புக்கூறுகளை அடிப்படையாகக் கொண்டு பிழைக்கும் ஒரு தொடர்பாடல் என்னும் எடுத்துக்காட்டு தொடக்கநிலையாக அமையலாம்.*

வகுப்பு 7 - 9 | 45 மணித்துளிகள்



**கருவிகள்:**
உரையாடலின் பிரதிகள் (அடுத்த பக்கத்தில் முதன்மை நகல்)

**குறிப்புகள்:**

- உரையாடல் ஒன்றிற்கான எடுத்துக்காட்டுக்கு ஒருவரின் தன்வாழ்விடச் சூழலிலிருந்து, இன்னொன்றினை எவ்வித சிக்கலுமின்றிப் பதிலீடு செய்யலாம் எப்படி இருப்பினும் எமது எடுத்துக்காட்டுக்கு ஒத்ததாகக் கணிக்கப்படும்.
- வளம்: according to Triandis (1972) in Thomas Alexander et al. (publisher) (2003): Handbook for intercultural communication and cooperation, vol. 1. Göttingen: Vandenhoeck & Ruprecht.

---

**நடைமுறை:**

- ஆசிரியர் முதலில் பொறுப்பேற்றல் ∴ பண்புக்கூற்று என்னும் பதம் பற்றி விளக்குகிறார் (வரைவிலக்கணம்: குணநலன்கள் தொடர்பாக மக்கள் தம்மீது அல்லது பிறர்மீது ஏற்படுத்தும் பண்புக்கூற்று, எ.கா. இனம் அல்லது ஒரே வகைமாதிரிகள் அல்லது பொருள்விளக்கம்). இது தொடர்பாக மாணவர்கள் பெற்றிருக்கக்கூடிய பட்டறிவுகள் பற்றிய கலந்துரையாடல்.
- ஓர் உரையாடல் இரண்டு நிலைகளில் பகுப்பாய்வு செய்யப்பட வேண்டும் என்று மாணவருக்கு அறிவுறுத்தல் தரப்படும். 1. ஒரு நிலையில் என்ன உண்மையில் சொல்லப்பட்டது என்பதை அடிப்படையாகக் கொண்டு, மற்றும் 2. பேசாத பொருள் விளக்கங்கள் அல்லது பண்புக்கூற்றுகள் நிலையில். கருப்பொருள் ஓர் அமெரிக்கன் மேற்பார்வையாளருக்கும் ஒரு பன்னாட்டு நிறுவனத்து ஒரு கிரேக்கப் பணியாளருக்குமிடையே நடைபெறும் ஓர் உரையாடலே இப்பயிற்சியின் சூழிடமாகும். செயற்பாடு கிறீசில் நடைபெறுகிறது. கிரேக்க வேலையாள் நீண்ட கால வெற்றிகரமான பணியாளர். அமெரிக்கனோ அண்மையில் கிரேக்க துணைநிறுவனத்தில் பதவிநிலை உயர்த்தப்பட்ட ஒரு முகாமையாளராவார்.
- அந்த உரையாடலின் பிரதியை மாணவர் பெற்றுக் கொள்வர். ஆசிரியரால் முன்னரே மடிக்கப்பட்ட பண்புக்கூற்றுப் பகுதி, (வலப்பக்கம்) மாணவரால் பார்க்கக்கூடாத பகுதி. மாணவர்கள் வேறுவேறான கதாபாத்திரங்களைப் பெற்று உரையாடலை உரத்துப் படிப்பதில் ஈடுபடுவர், பின்னர் சிறு குழுக்களில் தொடர்பாடற் செயலிழப்புகளுக்கான காரணங்கள் பற்றிக் கலந்துரையாடுவர்.
- பின்னர் அவர்கள் தாளைப் பிரித்து வலது பகுதி நிரலில் உள்ள பண்புக்கூற்றுகளை வாசிப்பர். எப்படி இப் பண்புக்கூறுகள் ஏற்பட்டன என்பதை இணையராகக் கலந்துரையாடுவர்.
- முழு வகுப்பினரும் உருக்காட்டுதலும் கலந்துரையாடலும்:
  - தொடர்பாடல் தடைபடுவதற்கான முதன்மைக் காரணங்கள் எவை?
  - எந்த வகையான விழுமியங்கள், நடத்தைக் கோலங்கள் மற்றும் பண்பாட்டுச் சிறப்பு மனப்பான்மைகள் அந்த இரு மனிதரின் நடத்தைக்குப் பொறுப்பாக இருந்திருக்கலாம்?
  - இச் சூழலை உருப்படியாகக் கையாளுவதற்கான அடுத்த கட்டம் என்னவாக இருக்க முடியும்? (பல்பண்பாட்டுத் தொடர்பாடலின் நுட்பங்களைக் கோவைப்படுத்துவது பயன்மிக்கதாக அமையும்)
  - இது தொடர்பாக மாணவர் எவ்வகையான பட்டறிவுகளை பெற்றுக் கொண்டுள்ளனர்?

ப.தா.

# புதிய அமெரிக்கன் மேற்பார்வையாளர் மற்றும் அவருடைய கிரேக்கப் பணியாளர்

மாணவர்களுக்கான "உரையாடல்" பணித்தாள்

| நடத்தை / என்ன சொல்லப்பட்டது | | பண்புக்கூறு: பொறுப்பேற்றல் / பொருள்விளக்கம் / எண்ணங்கள் | |
|---|---|---|---|
| **அமெரிக்கன்:** | இந்த அறிக்கையை முடிக்க எவ்வளவு காலம் வேண்டும்? | ***அமெரிக்கன்:*** | *நான் அவரை பங்குபற்றலுக்கு அழைக்கிறேன். தீர்வெடுப்பதில் அவரையும் சேர்த்துக்கொள்ள விரும்புகிறேன்.* |
| **கிரேக்கன்:** | எனக்கு எவ்வளவு காலம் தேவைப்படும் என்பது தெரியவில்லை. | ***கிரேக்கன்:***<br>***அமெரிக்கன்:*** | *இதன் போக்கு என்ன? அவர்தான் தலைவர்: அவர் ஏன் எனக்குத் தெளிவான அறிவுறுத்தல்களைத் தரவில்லை.*<br>*அவர் பொறுப்பேற்க மறுக்கிறார்.* |
| **அமெரிக்கன்:** | எவ்வளவு காலம் தேவைப்படும் என்பதை நீரே நன்றாகத் தீர்மானிக்கலாம். | ***அமெரிக்கன்:***<br>***கிரேக்கன்:*** | *தன் செயற்பாடுகளுக்கு அவரே பொறுப்பேற்கவேண்டும்.*<br>*என்ன பேய்க்கதை! அவருக்கு நான் ஒரு மறுமொழி சொல்கிறேன்.* |
| **கிரேக்கன்:** | சரி, பத்து நாள்கள். | ***அமெரிக்கன்:*** | *அவருக்கு சரியாகக் காலத்தை மதிப்பிட முடியவில்லை. இந்த மதிப்பீடு முற்றாக சாத்தியமற்றது.* |
| **அமெரிக்கன்:** | 15 நன்றாயிருக்கும். 15 நாள்களில் வேலையை நிறைவுசெய்ய உடன்படுகிறீரா? | ***அமெரிக்கன்:***<br>***கிரேக்கன்:*** | நான் அவருக்கு ஓர் உடன்படிக்கையை வழங்குகிறேன்.<br>சரி, அவர் 15 நாள்களை வேண்டுகிறார், அவர்தான் தலைவர். |
| உண்மையில், அறிக்கையை நிறைவுசெய்ய 30 நாள்கள் வேண்டும். இதனால், கிரேக்கன் இரவு பகலாக வேலை செய்தும் 15ஆவது நாளில் மேலதிகமாக இன்னொரு நாள் தேவைப்பட்டது. | | | |
| **அமெரிக்கன்:** | அறிக்கை எங்கே? | ***அமெரிக்கன்:***<br>***கிரேக்கன்:*** | அவர் உடன்படிக்கைக்கு இசைவாக அமைகிறாரா என்பதை நான் உறுதிசெய்யவேண்டும்.<br>அவர் அறிக்கையை கேட்கிறார். |
| **கிரேக்கன்:** | அது நாளைக்கு நிறைவடையும். | ***இருவரும்:*** | அறிக்கை இன்னும் நிறைவடையவில்லை. |
| **அமெரிக்கன்:** | அது இன்று முடிக்கலாம் என்று இருவரும் முடிவுசெய்தோம்! | ***அமெரிக்கன்:***<br>***கிரேக்கன்:*** | உடன்படிக்கைகளுக்கு இசைவாக வேண்டும் என்பதை நான் அவருக்குப் படிப்பிக்க வேண்டும்.<br>இந்த தகுதியற்ற முட்டாள் தலைவர்! அவர் பிழையான அறிவுறுத்தல்களைத் தந்தது மட்டுமன்றி, 30 நாள் வேலையை 16 நாளில் நான் முடித்துள்ளதைப் பாராட்டவும் இல்லை. |
| கிரேக்கன் தன் பணியிலிருந்து நீங்குவதாக அறிவிக்கிறார். அமெரிக்கன் வியப்படைகிறார். | | | |
| | | ***கிரேக்கன்:*** | இத்தகைய ஒருவருடன் என்னால் பணி செய்ய முடியாது |